Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 53/2016**

**2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | கார் டயர் ஷோரூம் உரிமையாளர் |
| பெயர் | - | ஜீவிதாதேவி | வட்டம் | - | மதுரை |
| க/பெ | - | ராஜா | சமயம் | - | |
| கிராமம் | - | மதுரை | வயது | - | 33 |
| சாதி | - | | | | |

**19.01.2024**

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது. )**

( சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. எத்தனாந் தேதி, எத்தனை மணிக்கு யார் யாரெல்லாம் போய் புகார் கொடுத்தீர்கள் என்றால் 26.08.2016 -ல் 03.00 மணிக்கு சம்பவம் நடந்தது. நானும் அம்மாவும் உடன் இரண்டுபேரும் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு போயிருந்தோம். அங்கு சிகிச்சையில் இருந்தபோது போலீசார் வந்து பெட்டிஷன் வாங்கினார்கள். எத்தனை மணிக்கு என்றால் அது கரட்டாக எனக்கு ஞாபகமில்லை. 05.30 -க்கு மேல்தான் இருக்கும்.

2. அக்காமலையிலிருந்து GH-க்கு எப்படி வந்தீர்கள் என்றால் பஸ்ஸில்தான் வந்தோம். 03.30-க்கு மேல்இருக்கும் ஒரு பஸ் வந்தது. அதுவரை அங்குதான் உட்கார்ந்திருந்தோம். எங்கள் வீட்டிலிருந்து சின்ன ஆஸ்பத்திரி எவ்வளவு தூரம் உள்ளது என்றால் டிஸ்பன்சரி 1 கி.மீ தூரத்தில் உள்ளது.

4. பெரிய கருமலை ஆஸ்பத்திரி 4 கி.மீ தூரத்தில் உள்ளது. அங்கு ஆம்புலன்ஸ் வசதி உள்ளது என்பது எனக்கு தெரியும். அங்கு முதல் உதவி சிகிச்சைக்கு நான் செல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு 18.03.2009-ல் திருமணம் நடந்தது.

5. எத்தனாந்தேதி, எத்தனை மணிக்கு போலீசார் யார் யாரையெல்லாம் விசாரித்தார்கள் என்றால்

சம்பவம் நடந்த அன்றே விசாரித்தார்கள். GH-க்கு வந்து விசாரித்தார்கள். அதன்பிறகு போலீசார் விசாரித்தார்களா என்றால் வால்பாறையில் விசாரிக்கவில்லை. டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு போனபிறகு சம்பவயிடத்தை வந்து பார்வையிட்டு விசாரித்தார்கள். அடுத்தநாளா என்றால் இல்லை ஒருவாரம் கழித்து. தேதி எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை.

6. திருமணமாகி கோயம்புத்தூரில் குடியிருந்தேன். எப்போது முதல் பிரிந்து வாழ்ந்தேன் என்றால் 2015 செப்டம்பரில் இருந்து. இடையில் எதிரி வந்து பார்த்தாரா என்றால் 2-3 முறை பார்த்து பிரச்சனை செய்தார். துடியலூர் போலீஸ் ஸ்டேசனில் சொன்னேன். அதன்பிறகு வரவில்லை. அக்காமலையில் நான் இருந்தபோது வந்து பார்த்தாரா என்றால் அக்காமலையில் இருந்தபோது வந்து பார்த்தபோதுதான் இந்த சம்பவம் நடந்தது.

7. துடியலூரில் கொடுத்த புகாருக்கு FIR போட்டார்களா என்றால் போடவில்லை. வேறு பெண்ணோடு ஒடிவிட்டார் என்று சொன்னார்கள். எத்தனை மணிக்கு எங்க வீட்டிற்கு வந்தார் என்றால் 02.30 க்கு. தகவல் சொல்லி வந்தாரா, தகவல் சொல்லாமல் வந்தாரா என்றால் சொல்லாமல்தான் திடீரென வந்தார். அவர் திடீரென வந்தபோது நான் போனில் பேசிக்கொண்டிருந்தேன் என்று அது யாரென கேட்டு போனை என்னிடமிருந்து கேட்டதால் நான் தராமல் அவர் மீது புகார் கொடுத்தேன் என்றால் என்னிடம் அப்போது போனே இல்லை.

8. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எதிரி மீது சேர்ந்து வாழ பிடிக்காமல் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் அப்படியெல்லாம் இல்லை. அவர் வெட்டும்போது கூட வந்து தடுத்தவர் இருக்கிறார். வீட்டை எரித்துவிட்டாங்க. அடிபடாமலா GH-க்கு போயிருப்பேன் என்று சாட்சி சொல்கிறார்.

9. சும்மா சும்மா நீ சேர்ந்து வாழ கூப்பிட்டேனா வீட்டைக் கொளுத்திவிட்டு நீதான் கொளுத்தினேன் என்று போலீஸிடம் சொல்வேன் என்று நான் சொன்னேன் என்றால் எனக்கும் சேர்ந்து வாழ ஆசைதான். ஆன கரட்டாக இல்லை.

10. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 53/2016

**2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | எஸ்டேட் டிரைவர் |
| பெயர் | - | ஜான்சன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | சுடலை | சமயம் | - | |
| கிராமம் | - | அக்காமலை எஸ்டேட் | வயது | - | 57 |
| சாதி | - | | | | |

**19.01.2024**

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது. )**

( சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. என்னுடைய வேலை நேரம் எத்தனை மணி நேரம் என்றால் காலை 07.00 மணிக்கு போனால் மாலை 07.00 மணிவரை இருக்கும். மதியம் 01.00-02.00 வரை சாப்பாடு இடைவேளை. எஸ்டேட் டிரைவரின் வேலை என்னவென்றால் பறித்த தேயிலை ஏற்றி கொண்டுபோய் பேக்ட்ரியில் இறக்கிவிடுவது.

2. 26.08.2016-ல் எந்ததெந்த தேயிலைக் காட்டில் தேயிலை எடுத்தார்கள் என்றால் ஞாபகமில்லை. அந்த சமயத்தில் எத்தனை மணிக்கு பறித்த தேயிலை கொழுந்தை எடைபோடுவார்கள் என்றால் 11.30 மணிக்கும், சாய்ங்காலம் 04.30 மணிக்கும். அன்றைக்கு நான் வேலைக்கு போயிருந்தேனா என்றால் ஆமாம்.

3. 03.00 மணிக்கு வந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் கொழுந்து பறிக்கும் நேரத்தை தவிர மற்ற சமயத்தில் லீவ் இருக்கும். மற்ற சமயத்தில் லீவ் இருக்கும் எப்படி என்றால் 11.30 மணிக்கு கொழுந்தைக் கொண்டுபோய் பேக்ட்ரியில் கொண்டுபோய் சேர்த்துவிட்டு 01.00 மணிக்கே வீட்டிற்கு வந்துவிடுவேன்.அடுத்து 04.30 பறித்த கொழுந்தை எடைப்போடுவதற்கு 04.00 மணிக்கு போவேன்.

4. மதிய உணவு இடைவேளை 01.00-02.00 என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். ஒவ்வொரு சமயத்தில் வேளை அதிகமாக இருக்கும். அப்போது நேரம் மாறுபடும். அன்றைக்கு 01.00 மணிக்கே வீட்டிற்கு வந்துவிட்டேன். என்னுடைய வீட்டிற்கும் அசோகன் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒரே லைன், என் வீட்டிலிருந்து 5 வீடு தள்ளி உள்ளது.

5. எத்தனாந்தேதி, எத்தனை மணிக்கு போலீசார் விசாரித்தார்கள் என்றால் 27-ம் தேதி மாலை அங்கேயே வந்தார்கள். யார் யாரை விசாரித்தார்கள் முதலில் யாரை விசாரித்தார்கள் என்றால் முதலில் என்னை கூப்பிட்டு விசாரித்தார்கள். வேறு யாரை விசாரித்தார்கள் என்று தெரியவில்லை. எனக்கு வேலைக்கு நேரமாகிவிட்டதால் சொல்லிவிட்டு கிளம்பிவிட்டேன்.

6. 27.08.2016-ம் தேதிக்கு பிறகு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் அந்த ஒரு டைம் மட்டும் விசாரித்தார்கள். அதன்பிறகு விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி மீது நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. என்ன சத்தம் போட்டார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. என்ன சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சம்பவம் நடந்தது தெரியும். அதை சொல்லுங்கள் என்றால் நான் சாப்பாட்டிற்கு வரும்போது ஜீவிதாவின் மாப்பிள்ளை வெளியில் நின்று சத்தம்போட்டுக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் நான் போய் எதுக்குப்பா சத்தம் போடுறிங்க என்று கேட்டேன். இது என் சொந்த பிரச்சனை நீங்கள் தலையிட வேண்டாம் என்று சொன்னார். அப்போது நான் அவருடைய வீட்டில் யாரும் இல்லை. அப்பா, அம்மா வேலைக்கு சென்றுவிட்டு மாலை வீடு திரும்புவார். அப்ப நீங்க பேசுங்க தம்பி எதுனாலும் என்று சொல்லிவிட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். வந்து சாப்பிடலாம் என்று பிலேட்டில் சாப்பாடு போட்ட நேரத்தில் பயங்கர சத்தம் ஐயோ என்னை காப்பாத்துங்கள் என்று கேட்டது. அவங்க வீட்டிற்கு நான் போனேன். அப்போது அவருடைய மனைவியை நன்றாக அடித்து உதைத்தார். அந்த நேரத்தில் மனைவி வீட்டைவிட்டு வெளியே வந்துவிட்டது. அந்த நேரத்தில் ராஜா பையன் வீட்டிற்குள்ளே போய் பழைய கத்தி எடுத்து இடதுபக்கத்தில் ஒரு வெட்டு, முதுகில் ஒரு வெட்டு வெட்டினார். நாங்க போய் அந்த கத்தியை புடுங்கி விட்டோம். புடுங்கி விட்டதும், அந்த புள்ளை வேறு லைனுக்கு போய்விட்டது. அந்த பையன் லைனை சுத்தி சுத்தி தேடி வந்தார். மனைவி கிடைக்கவில்லை என்றதும் வீட்டிலிருந்த 5 லிட்டர் மண்ணெண்ணெய் கேன் எடுத்து தொறந்து வீடு புள்ளா 3 ரூம்மிலையும் வீடு முழுவதும் பிரோ கட்டில் ஊத்தி விட்டு பத்தவச்சிவிட்டு அந்த இடத்திலிருந்து ஓடிவிட்டார். அதன் பிறகு நாங்கள் அமச்சி பாத்தோம். அமக்க முடியவில்லை. அந்த பிள்ளையில் அம்மா காட்டில் வேலை செய்துகொண்டிருந்தது. அதுக்கு போய் நேரில் அதுமாதிரி ஆகிவிட்டது என்று சொன்னேன். வீட்டிற்கு வரும் நேரத்தில் வீடெல்லாம் சாம்பலாகி செவர் மட்டுமே இருந்தது. அவ்வளவுதான்.

7. நாங்கள் போய் பிடிச்சி பாத்தோம். அனைச்சி பார்த்தோம் அவர்கள் யார் யாரென்று சொல்லுங்கள் என்றால் நானும் லைன்சில் உள்ள 2 பேரும். அவருடைய பேரை சொல்லுங்கள் என்றால் அது சரியாக எனக்கு ஞாபகமில்லை. உண்மையாகவே அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் அந்த எஸ்டேட்காரர் என்பதால் எனக்கு ஞாபகமிருக்கும் என்றாலும் அப்படி ஒரு சம்பவம் நடக்காததால்தான் ஞாபகமில்லை என்று சொல்கிறேன் என்றால் நடந்ததுதான் உண்மை.

8. போலீசார் விசாரித்தபோது யார் யார் அணைத்தோம் என்று சொல்லியுள்ளேனா என்றால்

நிறையபேர் இருந்தார்கள். தீ பிடித்த பதற்றத்தில் யார் யார் என்று சொல்லமுடியவில்லை. அப்போது போலீசார் விசாரித்தார்களா என்றால் மறுநாள் தான் விசாரித்தார்கள். எங்கள் எஸ்டேட்டில் சின்ன ஆஸ்பத்திரி உள்ளதா என்றால் இல்லை. GH-க்கு கூப்பிட்டுபோக சொல்லிவிட்டார்கள். ஊர் மக்கள் அவ்வாறு சொல்லிவிட்டார்கள்.

9. அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் சின்ன ஆஸ்பத்திரிக்கு கூப்பிட்டு போயிருப்பேன் என்றால் நான் ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போகவில்லை. ஊர்மக்கள் நிறையபேர் கூடிவிட்டதால் அவர்கள் போலீசாருக்கு தகவல் சொல்லி GH-க்கு கூப்பிட்டு போனார்கள். யார் கூப்பிட்டு போனார்கள் என்றால் அவங்க அம்மா தாயார்.

10. போன் செய்தால் பெரி ஆஸ்பத்திரியிலிருந்து ஆம்புலன்ஸ் வருமா என்று வரும். போன் செய்யவில்லை. அப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் நான் போன் செய்து ஆம்புலன்ஸ் வரவழைத்திருப்பேன் என்றாலும், அப்படியொரு சம்பவம் நடக்கவில்லை அதனால் தான் போன் செய்யவில்லை என்றால் சரியல்ல.

11. அந்த நேரத்தில் அந்த எஸ்டேட்டில் யார் வாட்ச்மேனாக இருந்தார் என்றால் மாரிமுத்து (எ) சுரேஷ். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், நானும் அசோகனும் உறவுக்காரர் என்பதால் அவர் மகள் கொடுத்த பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் நான் உறவுக்காரர் இல்லை. ஒரே எஸ்டேட்டில் இருக்கிறோம். நானும் அசோகனும் ஒரே லைனில் இருப்பதால் அவருடைய மகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 53/2016

**2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 3-வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | காட்டில் வேலை |
| பெயர் | - | கவிதா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | அசோகன் | சமயம் | - | |
| கிராமம் | - | அக்காமலை எஸ்டேட் | வயது | - | 61 |
| சாதி | - | | | | |

<u>19.01.2024</u>

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது. )**

( சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. எத்தனாந்தேதி எத்தனை மணிக்கு யார் வந்து உங்களுக்கு தகவல் சொன்னார்கள் என்றால் 26.08.2016 -ம் தேதி நான் காட்டில் வேலை செய்துகொண்டிருக்கும்போது ஜான்சன் எனக்கு போன் செய்து இதுமாதிரி உன் மகளை வெட்டிவிட்டான். வீட்டைக் கொளுத்திவிட்டான் என்று சொன்னார். இதற்கு முன்னால் நீதிமன்றத்திற்கு சொன்ன சாட்சியத்தில் வாட்ச்மேன் சொல்லிதான் தெரிந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் வாட்ச்மேன் ஜான்சனிடம் சொல்லி அக்காவை காட்டிலிருந்து கூப்பிடுங்க என்று சொல்லியுள்ளார்.

2. இந்த சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் நான் வந்து பார்த்தபோது என் வீடு

கரிக்கட்டையாக இருந்தது.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 53/2016

**2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 4 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 4 | தொழில் | - | தேயிலை தோட்டத்தில் வேலை |
| பெயர் | - | பிரேம் | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | சரவணன் | சமயம் | - | |
| கிராமம் | - | அக்காமலை | வயது | - | 52 |
| சாதி | - | | | | |

**19.01.2024**

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது. )**

( சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. இந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

CC.No. 53/2016

**2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 5 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 5 | தொழில் | - | கூலித் தொழிலாளி |
| பெயர் | - | சரவணன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | மாடசாமி | சமயம் | - | |
| கிராமம் | - | அக்காமலை | வயது | - | 55 |
| சாதி | - | | | | |

**19.01.2024**

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது. )**

( சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. நான் எஸ்டேட்டில் கூலி வேலை செய்கிறேன். காலையில் 07.00 மணிக்கு காட்டிற்கு போவேன். நான் கையெழுத்திட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது தெரியுமா என்றால் தெரியாது. புதரிலிருந்து ஒரு கத்தியை எடுத்து ஒரு பேப்பரில் சுத்தினார்கள். கையெழுத்து போட்டேன். கத்தி எத்தனை மீட்டர் நீளமுள்ளது என்றால் 1 1/2 அடி இருக்கும். எத்தனை கையெழுத்து போட்டீர்கள் என்றால் சரியாக ஞாபகமில்லை. 7-8 வருடம் ஆகிவிட்டது. சுமாராக எவ்வளவு நேரம் கழித்து கையெழுத்து போட்டேன் என்றால் சரியாக ஞாபகமில்லை. 7-8 வருடம் ஆகிவிட்டது.

2. கத்தி எவ்வளவு அகலம் இருக்கும் என்றால் 2 இன்ச் இருக்கும். கைப்பிடி என்ன கலரில் இருந்தது என்று ஞாபகமுள்ளதா என்றால் ஞாபகமில்லை. 07.00 மணிக்கு வேலைக்கு போய் எத்தனை மணிக்கு வருவேன் என்றால் 07.00 மணிக்கு போய் நம்பர் கொடுத்துவிட்டு வீட்டிற்கு வந்துவிடுவேன். திரும்ப சாப்பாடு எடுத்துக்கிட்டு காட்டிற்கு போவேன்.

3. எங்க வீட்டிலிருந்து அசோகன் வீட்டிற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 4 லைன், 200 மீட்டர் இருக்கும். நான் அந்த டிவிசனில் ஒர்க்ஸ் கமிட்டியில் இருந்தேன். தற்போது இல்லை. பொதுவாக போலீசார் வந்தால் ஒர்க்ஸ் கமிட்டியை கூப்பிடுங்க என்று சொல்வார்கள் என்றால்

சரிதான்.

4. என் முன்னிலையில் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றாலும் நான் ஒர்க்ஸ்கமிட்டி என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் பொய்யாக சொல்லவில்லை. என் முன்னிலையில் கத்தியை எடுத்தார்கள். என் முன்னிலையில் கத்தி எடுத்திருந்தால் நீளம், அகலம் சரியாக சொல்லியிருப்பேன் அவ்வாறு எடுக்காததால்தான் சரியாக சொல்லவில்லை என்றால் சரியல்ல.

5. நான் சொல்வதுபோல் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றாலும் அ.சா. 1 க்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No. 53/2016**

**2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 6 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 6 | தொழில் | - | காட்டில் வேலை |
| பெயர் | - | ஜெயலட்சுமி | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | கணேசன் | சமயம் | - | |
| கிராமம் | - | அக்காமலை | வயது | - | 49 |
| சாதி | - | | | | |

**19.01.2024**

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317 -கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பப்பட்டது. )**

( சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

1. இந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம்.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திரு. ரெ. செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.